மாண்புமிகு பேரவைத் துணைத்தலைவர் : மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்களின் விளக்கத்திற்குப் பிறகு, அவையின் பிற அலுவல்களை ஒத்திவைத்து, இத்தீர்மானம் குறித்து விவாதிக்க வேண்டிய தேவையில்லை என்ற காரணத்தினால் இதற்கு இசைவு மறுக்கப்படுகிறது.

4. தகவல் கோரல்

மேட்டூரணை தண்ணீர் குறித்து

திரு. ரெ. இராசமாணிக்கம் : தலைவரவர்களே, தஞ்சை மாவட்ட விவசாயிகளுக்கு மார்ச் மாதம் 15 ஆம் தேதி வரை தண்ணீர் தேவைப்படுகிறது. மேட்டூர் அணையை மூடிவிடுவதாகச் சொல்லப்படுகிறது. ஆகவே இது குறித்து விதி 41-ன் கீழ் நான் ஒரு கவன ஈர்ப்புத் தீர்மானம் கொடுத்திருந்தேன். அது எப்போது எடுத்துக்கொள்ளப்படும் என்பதை அறிய விரும்புகிறேன். ஒருவேளை அது மேட்டூர் அணையை மூடிய பிறகு எடுத்துக்கொள்ளப்படுமா அல்லது மூடுவதற்கு முன்னாலே எடுத்துக்கொள்ளப்படுமா என்பதை அறிய விருப்புகிறேன்.

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு : பேரவைத் துணைத் தலைவரவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திரு. இராசமாணிக்கம் அவர்கள் மேட்டூர் அணையிலே இருந்து திறந்துவிடப்படுகின்ற தண்ணீரை மார்ச் 15ஆம் தேதி வரையில் நீடிக்க வேண்டும் என்ற கோரிக்கையினை எழுப்பியுள்ளார்கள். 25–2–1979 வரையிலே மேட்டூர் அணையிலே இருந்து தண்ணீர் திறந்து விடப்பட்டு இருந்தது. அதை மீண்டும் நீடிக்க வேண்டும் என்று அரசு கருதிய காரணத்தால் வருகிற 28–2–1979 வரையிலேயும் அது நீடிக்கப்படுகிறது. மேலும் மேட்டூர் அணையை 28–2–1979 அன்று மூடினாலும் அதற்குப் பின்னாடி ஏறத்தாழ ஒரு வாரம் அந்த வாய்க்காலிலே தண்ணீர் போய்க்கொண்டிருக்கும் என்று வேளாண்மைத்துறையின் மூலமாகவும், நீர்ப்பாசன துறையின் அதிகாரிகளின் மூலமாகவும் எனக்கு தகவல் கிடைத்திருக்கிறது.

ஆகவே அந்தத் தகவலின் அடிப்படையில் 28–2–1979 வரையில் தண்ணீர் திறந்துவிடப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : 41 ஆவது விதியின் கீழ் கொடுத்திருந்தார்கள். அமைச்சர் அவர்கள் இன்று ஸ்டேட்மெண்ட் கொடுப்பதாகச் சொல்லியிருந்தார்கள். அதற்கு சந்தர்ப்பம் வரவில்லை. ஆகவே மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் ஒரு தகவல் கோரலாக எழுப்பி அதற்கு அமைச்சர் அவர்கள் பதிலும் கொடுத்துவிட்டார்கள். ஆகவே இதுபற்றி மேலும் விவாதம் வேண்டாம். ஸ்டேட்மெண்ட் வந்த பிறகுதான் எடுத்துக்கொள்ள வேண்டும். ஆனால் இதன் முக்கியத்துவம் கருதி கேள்வி எழுப்பப்பட்டு பதிலும் பெறப்பட்டிருக்கிறது.

(மூன்று உறுப்பினர்கள் எழுந்து நின்றுகொண்டிருந்தனர்.)

1979 பிப்ரவரி 24]

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : மூன்று பேர்கள் நின்று கொண்டிருந்தால் யாரை அழைப்பது. திரு. கூத்தகுடி சண்முகம்.

(மூன்று உறுப்பினர்கள் நின்றுகொண்டிருந்தனர்.)

திரு. கூத்தகுடி ச. சண்முகம்; என்னை அழைத்துவிட்டீர்கள். ஆகவே நான் பேசிவிட்டுத்தான் உட்காருவேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : மூன்று பேர்கள் நின்று கொண்டிருந்தால் எப்படி, முதலில் திரு. கூத்தகுடி சண்முகம் அவர்கள் பேசட்டும்.

திரு. கூத்தகுடி ச. சண்முகம் : துணைத் தலைவர் அவர்களே நான் ஒரு முக்கிய கவன ஈர்ப்புத் தீர்மானம் கொடுத்திருந்தேன் கிளர்ச்சிக்குப் பிறகுதான் கவனத்திற்கு வரும் என்றால் கிளர்ச்சி களைத் தொடங்கலாம். 23ஆம் தேதி எடுத்துக்கொள்ள சபா நாயகர் அவர்களிடம் கேட்டேன். இன்றைக்கும் கொண்டு வரப்படவில்லை. நான் அதன் விவரங்களுக்குள் போக விரும்ப வில்லை. மாடுகளை வாங்கமுடியாமல் தெருவில் ஆயிரக் கணக்கில் மாடுகள் போய்க்கொண்டிருக்கின்றன. ஆட்டு இறைச்சி கிலோ ரூ. 20-க்கு விற்கப்படுகிறது. நானே போய் மாடு களை ஓட்டினால்தான் கவனத்திற்குவரும் சொன்னபடி செய்தால் நல்லது. ஆகவே தயவுசெய்து அதை எடுத்துக்கொள்ளவேண்டும்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : அமைச்சர் அவர்களிடமிருந்து அறிக்கை வந்திருந்தால் எடுத்துக்கொள்ளப் பட்டிருக்கும். ஆகவே தயவுசெய்து அதைப்பற்றி என் அறைக்கு வந்து கேளுங்கள்.

திரு. க. சுப்பு : துணைத் தலைவர் அவர்களே, ஒத்தி வைப்புத் தீர்மானங்களைப் பொறுத்தவரையில் அவசர அவசியம் என்று கருதினால் ஒருநாள் விவாதிக்கிறோம் பிறகு மீண்டும் எடுத்துக்கொள்ளக் கூடாது என்பது விதி. ஆனால் ஆசிரியர்கள் பிரச்னையைப் பொறுத்தவரையில். தினந்தோறும் இதே வேலையாகயிருக்கிறது. இந்த நாட்டில் ஆசிரியர்கள் பிரச்சினையைத் தவிர வேறு பிரச்சினைகள் இல்லயையா ? தஞ்சை மாவட்டத்தில் தண்ணீர் விடக்கூடிய பிரச்னை எவ்வளவு முக்கியமானது என்பதை இந்த அவையின் கவனத்திற்குக் கொண்டுவர விரும்புகிறேன். அமைச்சர் அவர்கள் கேள்விக்கு பொறுப்பாக பதிலளித்தார்கள். இப்போது ஒரு விளக்கம் கேட்கிறோம். நீங்கள் இப்படியே போனால் எல்லோரும் உண்ணாவிரதம் இருந்துகொண்டிருப்பார்களா விவசாயிகள் பிரச்னைபற்றி பேசுவதற்கு நேரம் இல்லையா ? ஆசிரியர்கள் பிரச்னைபற்றி டெய்லி எடுத்துக்கொண்டிருக்

கிறோம். ஆகவே ராசமாணிக்கம் அவர்கள் ஒரு துணைக் கேள்வி கேட்டதற்கு அனுமதிக்கவேண்டும். பல நேரங்களில் நாம் விதிமுறைகளை மீறியிருக்கிறோம். இப்போது மீறச் சொல்லவில்லை. திரு. ராசமாணிக்கம் அவர்கள் ஒரு துணைக் கேள்வி கேட்க அனுமதிக்கவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: 41-வது விதியின்கீழ் நோட்டீஸ் கொடுத்து அமைச்சர் அவர்கள் பதில் தயாரித்து, ஸ்டேட்மெண்டை இங்கே வைத்து கேள்வி கேட்கிற நிலையில் இதை எடுத்துக்கொள்ளவில்லை. கவன ஈர்ப்பு தீர்மானம் கொடுத்திருந்தார்கள். இன்று அமைச்சர் அவர்கள் பதில் சொல்வதாக சொல்லியிருந்தார்கள். ஸ்டேட்மெண்ட் கொடுக்கவில்லை. ஆனால் இந்த பிரச்னையின் முக்கியத்துவத்தை கருதி அமைச்சர் அவர்கள் 28-ம் தேதி வரை தண்ணீர் தொடர்ந்து விடப்படும் என்று பதில் சொல்லிவிட்டார்கள். அதோடு முடித்துவிடலாம் என்றுதான் சொன்னேன். பலமுறை நடைமுறை விதிகள், விதிமுறைகள் மீறப்பட்டிருக்கிறது என்றால் தொடர்ந்து மீற வேண்டும் என்பது அவசியமில்லை. ஆகவேதான் சொல்கிறேன் ஒரு கேள்வி கேட்பதில் எனக்கு ஆட்சேபணையில்லை. ஆனால் இப்படிப்பட்ட முறை பின்பற்றப்படுமேயானால் பேரவை முறையாக நடக்க அது தடங்கலாக இருக்கும், ஆகவேதான் சொல்கிறேன். (குறுக்கீடு) முதலில் கேட்ட

(முற்பகல் 10–50)

கேள்விக்கு அமைச்சர் அவர்கள் பதில் சொல்லிவிட்டார்கள். மேலும் விளக்கம் பெற வேண்டுமானால் இன்னொரு கவன ஈர்ப்புத் தீர்மானம் கொடுங்கள். இப்போது எல்லாவற்றையும் கேட்டுக் கொண்டிருக்க முடியாது. தயவுசெய்து உட்காருங்கள். (குறுக்கீடு).

திரு. கோ. இளங்கோவன்: அமைச்சர் அவர்களே, பதில் சொல்ல தயாராய் இருக்கிறார்கள். நீங்கள் அனுமதித்தால் என்ன.........

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு: தலைவர் அவர்களே, நானே விளக்கம் தந்துவிடுகிறேன். மாண்புமிகு உறுப்பினர் ராஜமாணிக்கம் அவர்கள் கொடுத்த விதி 41 கவன ஈர்ப்புத் தீர்மானம்—அவசர முக்கியத்துவம் வாய்ந்த பொருள் குறித்துள்ள விவரம் வருகின்ற 5-ம் தேதி எடுத்துக் கொள்ளப் போவதாக சட்டமன்றத் துறை அறிவித்திருக்கிறது மேலும் இது முக்கியத்துவம் வாய்ந்த பிரச்னையாக இருப்ப தால் ராஜமாணிக்கம் அவர்கள் கேட்ட கேள்விக்கு சில

1979 பிப்ரவரி 24] [திரு. ப. குழந்தைவேலு]

விவரங்களைச் சொன்னேன். மேலும் 5-ம் தேதிக்குள் தண்ணீர் விடுவதற்கு நடவடிக்கை இல்லை என்று கோடிட்டு காட்டுவார்களேயானால் அதுபற்றி அரசு மீண்டும் பரிசீலிக்கும் என்பதை தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. என். வரதராஜன் : நான் ஏற்கனவே ஒரு ஒத்தி வைப்புத் தீர்மானம் கொடுத்திருந்தேன். மதுரை மாவட்டத்தில் உத்தமபாளையம் ஹாஜி கருத்தராவுத்தர் கல்லூரி மூடப்பட்டு பல நாட்களாகின்றன..........

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : இதற்கு முன் இரண்டு கல்லூரிகளின் பிரச்னைகள் பற்றி சொல்லப்பட்டது. அமைச்சர் அவர்களும் பதில் தந்துவிட்டார்கள். அத்துடன் அது முடிந்துவிட்டது. அதற்குப் பின்னால் தனித்தனியாக ஒவ்வொருவரும் பிரச்சினைகளை கேட்டுக் கொண்டு இருப்பது சரியல்ல. (குறுக்கீடு) தயவுசெய்து எல்லோரும் உட்காருங்கள். திரு. வரதராஜன் அவர்கள் கொடுத்த தீர்மானமும் ஆய்வில் இருக்கிறது என்பதை எப்போது தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. என். வரதராஜன் : ஆய்வில் இருக்கிறது என்றால் எப்போது எடுத்துக்கொள்ளப்படும் என்று தெரிவிக்க முடியுமா ?

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : ஆய்வில் இருக்கிறது, அவ்வளவுதான் இப்போது சொல்ல முடியும்.

திரு. மு. அம்பிகாபதி : தலைவரவர் அவர்களே : நான் ரொம்ப சீரியஸான ஒரு தீர்மானம் கொடுத்து பத்து நாட்கள் ஆகின்றன.......

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : அதுவும் ஆய்வில் இருக்கிறது. அதைப்பற்றி அறையில் வந்து கேளுங்கள்.

திரு. என். பழனிவேல் : தலைவர் அவர்களே, பழனிக்கு அருகேயுள்ள ஒரு பிரச்சினைபற்றி நான் ஒரு தீர்மானம்....

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : அதுவும் ஆய்வில் இருக்கிறது. அதைப்பற்றியும் அறையில் வந்து கேளுங்கள்.

திரு. க. அன்பழகன் : அறையில் என்றால் யார் அறையில் வந்து கேட்பது ?

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: பேரவைத்தலைவரின் அறையில்தான். இப்போது இரண்டு கவன ஈர்ப்புத் தீர்மானங்களை எடுத்துக்கொள்ளவேண்டியிருக்கிறது. அதற்கு நேரம் வேண்டும். தயவுசெய்து அதற்கு அனுமதியுங்கள், அடுத்து கவன ஈர்ப்புத் தீர்மானம், திரு. தாமரைக்கனி அவர்கள்,